**செய்தி வெளியீடு எண்: 444** **நாள்: 01.03.2024**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறையும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பும், மத்திய சென்னை மாவட்டம் மயிலாப்பூர் – மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கமும் இணைந்து தமிழ் நாட்டிலுள்ள வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் மாற்றம் குறித்து விழிப்புணர்வுக் கூட்டம் மற்றும் பேரணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறையும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பும், மத்திய சென்னை மாவட்ட மயிலாப்பூர் – மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கமும் இணைந்து தமிழ் நாட்டிலுள்ள வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் மாற்றம் குறித்து விழிப்புணர்வுக் கூட்டம் மற்றும் பேரணி 01.03.2024 வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் மயிலாப்பூர் – மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவர் மயிலை சி. பாஸ்கர் அவர்கள் வரவேற்புரையும், வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் மாற்றம் தொடர்பாக மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் தமிழில் பெயர்ப்பலகை மாற்றம் குறித்த சிறப்புரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் அவர்களும் கலந்து கொண்டார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் திரு.ஏ.எம். விக்கிரமராஜா அவர்களும் மாநிலப் பொருளாளர் ஹாஜி ஏ.எம். சதக்கத்துல்லா அவர்களும் தமிழில் பெயர்ப்பலகை மாற்றம் குறித்த விளக்க உரையினை ஆற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் பாரதியார் வாழ்ந்த இந்த மயிலைப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தக் கூட்டம் நடைபெறுவது மிகச்சிறப்பாகும் என்றும் வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் 5 மடங்காக அமைய வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார். "தமிழை வளர்க்கிறோம் என்பதைவிட தமிழைப் பாதுகாக்க வேண்டும்" என்ற சூழ்நிலையில் இருக்கிறோம் என்றும் இந்தக் கூட்டம் வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் அமைய தொடக்கமாக இருக்கும் என்றார். மே 1ஆம் தேதிக்குள் தமிழ்நாடு முழுவதும் உள்ள வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் வைக்க வேண்டுமென்றார்.

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் ஆற்றிய உரையில் மொழி என்பது ஒரு நாட்டினுடைய அடையாளம் என்றும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை இருக்க வேண்டும். சாதாரண ஏழை, எளிய பாமர மக்கள், அதிகம் ஆங்கிலம் தெரியாத மக்கள் நகரங்களுக்கு வருகிறபொழுது இங்குள்ள கடைகளில் பெயர்ப்பலகை ஆங்கிலத்தில் உள்ளதை மாற்றி தமிழில் பெயர் எழுதுவது தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாகும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்ற பாரதியாரின் வரிகளுக்கு மெருகூட்டும் வண்ணம், "இனிய தமிழையே எங்கும் காண்போம்" என்ற நிலை ஏற்பட வேண்டுமென்று கூறினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் திரு.ஏ.எம். விக்கிரமராஜா அவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழி என்று 1956ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டு தமிழ்நாட்டில் வணிக நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் பெயரை தமிழில் வைக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது என்றும் வணிகர்களாகிய நாம் இன்னும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நம் தாய்மொழியாகிய தமிழை நம் நிறுவனங்களின் பெயர்ப்பலகையில் மாற்றம் செய்வோம் என்று உறுதியேற்போம் என்றும் பெயர்ப்பலகையில் எழுதவேண்டிய பெயர் அளவுகள் தமிழில் 5 மடங்கிலும் ஆங்கிலத்தில் 3 மடங்கிலும் பிற மொழிகளில் 2 மடங்கிலும் இருக்க வேண்டும் என்றும் உறுதியேற்றனர். மதுரையில் மே 5–இல் நடைபெறும் மாநாட்டில் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைப்பதற்கு வலியுறுத்தப்படும் என்றார்.

மயிலாப்பூர் – மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்க பொதுச் செயலாளர் திரு.பி. அரிதாசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பேரணியில் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை அமைப்பது தொடர்பான துண்டுச் சீட்டுகள் வழங்கப்பட்டன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in